# ஊற்று



தலைவர் உரை :

## தொல்காப்பியருக்குச் சிலை அமைக்க கால்கோள் விழா

தமிழுக்கு கிடைத்த ஒப்பற்ற இலக்கணநூல் தொல்காப்பியம். சுமார் 3000 ஆண்டுகள் பழமையான இலக்கண நூலை படைத்த தொல்காப்பியர் இன்றைய குமாரி மாவட்டத்தில் காப்புக்காடு என்ற ஊரில் பிறந்தாக கருதப்படுகிறது. அவர் பிறந்த ஊரில் தொல்காப்பியருக்கு சிலை அமைக்க வேண்டும் என்று தொல்காப்பியர் ஆய்வு மைய அறக்கட்டளை முடிவு செய்து அதற்கான பணிகளில் இறங்கியது. அனைத்திந்திய தமிழ்ச்சங்கப்பேரவை, மற்ற தமிழ் அமைப்புகள், தமிழ் ஆர்வலர்கள், நன்கொடையாளர்கள் துணையோடு சிலை அமைத்திட அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டு கால்கோள் விழா ஏப்ரல் 3ஆம் நாள் சித்திரை முழுநிலவு நாளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நமது சங்கத்தின் முன்னாள் தலைவரும், அனைந்திந்திய தமிழ்ச்சங்க பேரவையின் செயல் தலைவர் பொறுப்பில் இருக்கும் மீனாட்சி சுந்தரம் அவர்களும், பொருளாளர் பொறுப்பிலும், நமது சங்க தலைவர் பொறுப்பில் இருக்கும் நானும், எழுத்தாளர் நண்பர் அமுதவன் அவர்களும் கலந்து கொண்டோம். தில்லி தமிழ்ச்சங்கம் சார்பிலும், அனைந்திந்திய தமிழ்ச்சங்க பேரவை பொதுச்செயலாளர் முகுந்தன் அவர்களும், துணைச்செயலாளர் இராகவன் நாயுடு அவர்களும் மற்றும் திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம், முத்துராமன், புதுவை தமிழ்ச்சங்கம் முத்து, தலைநகர் தமிழ்ச்சங்கம், கணபதி, ஆய்வு மைய அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர், புலவர் சுந்தரராசன், குமரி மாவட்ட நன்கொடையாளர்கள், பச்சைமால், காந்தி போன்ற அறிஞர் பெருமக்கள் திருவள்ளுவர் இலக்குவனார் மற்றும் பலர் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு விழா சிறப்புற நடைபெற்றது. சிலை அமைப்பிற்கு பின்னர் தொல்காப்பியர் ஆய்வு மண்டபம் அமைக்கவும், முடிவு செய்திருப்பதாக ஏற்ற பெரிய இடமாக தேர்வு செய்து அமைத்தால் சிறப்பாக இருக்கும் என்பது நமது கருத்து. பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நன்கொடையாளர்ககள் துணையோடு ரூபாய் ஒரு லட்சம் வழங்கி துணை நிற்போம் என்று உறுதி கூறி உள்ளோம்.

தொல்காப்பியர் சிலை அமைப்பு துவக்க விழாவிற்கு குமரி மாவட்டத்திற்கு சென்றிருந்த போது 4ம் தேதி திங்கட்கிழமை காலை தினச்சுடர் ஆசிரியர் முனைவர் பா.சு.மணி ஐயா அவர்கள் மறைந்துவிட்டார் என்ற செய்தியை பொருளாளர் சம்பத் அவர்களும், துணைத்தலைவர் தி. கோ. தாமோதரன் அவர்களும் தொலைபேசி வழி அறிவித்தார்கள். மிகவும் அதிர்ச்சியாகவும், வருத்தகமாகவும் இருந்தது. நமது பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தோடு கடந்த 50 ஆண்டுகளாக நெருக்கமான தொடர்பு கொண்டு அதன் ஒவ்வொரு வளர்ச்சியிலும், நதனது சிறப்பான பங்களிப்பை செய்தவர் முனைவர் பா.சு.மணி ஐயா அவர்கள்.

திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு 18 ஆண்டுகாலம் திறக்கப்படாமல் இருந்ததை கண்டு பெரும் முயற்சி எடுத்து 2009ஆம் ஆண்டு சிலை திறந்திட பெரிதும் துணை நின்றவர். சங்கம் நடத்தும் பள்ளிக்கு பெருந்தலைவர் காமராசர் சாலை பெயர் வைக்கவும், கேவல்ரி சாலை பாரத ரத்னா காமராசர் சாலை என்ற பெயர் மாற்றத்தை ஏற்படுத்தவும் காரணமாக இருந்தவர். 'தினச்சுடர்' மாலை நாளிதழை முதன்முதலாக தொடங்கி வெற்றிகரமாக நடத்தியவர். அதனோடு 'சஞ்சேவாணி' என்ற கன்னட மாலை நாளிதழையும் சிறப்பாக துவங்கி நடத்தி கர்நாடக மாநில பெரும் தலைவர்களோடும், அதிகாரிகளோடும் நெருக்கமான நட்பு பாராட்டி வந்தவர். அவருடைய சாதனை ஒவ்வொரு தமிழனுக்கும் எடுத்துக்காட்டான வாழ்வு ஆகும். கர்நாடக அரசும் முதன் முறையாக சாதனைத் தமிழரான முனைவர் பா.சு.மணி ஐயா வர்களுக்கு அரசு மரியாதை அளித்து தமிழர்கள் அனைவரும் நெகிழ்ச்சியான நன்றி பாராட்டும் வகையில் இறுதி வணக்கத்தை செலுத்தியது. இதற்கு பெரிதும் காரணமான முதல்வர் மாண்புமிகு சித்தராமையா அவர்களையும் உள்துறை அமைச்சர் மாண்புமிகு கே.ஜே.ஜார்ஜ் அவர்களையும் பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் நன்றியுடன் பாராட்டுகிறது.

முனைவர் பா.சு.மணி ஐயா அவர்கள் மறைந்து நான்கு நாட்களில் நாம் சிறிதும் எதிர்பார்க்காத வகையில் சங்க இலக்கிய வகுப்பின் ஆசிரியராகவும், மூத்த உறுப்பினராகவும் இருந்த புலவர் பெருமாள் ஐயா அவர்கள் திடீரென்று மறைந்துவிட்டார். அவருடைய மறைவை இன்னமும் நம் மனது ஏற்றுக்கொள்ளவில்லை. இருபெரும் சான்றோர்களுக்கும் 17-5-2015 அன்று சங்கத்தின் சார்பில் அனைது தமிழ் தமிழர் அமைப்புகளோடு இணைந்து இரங்கல் கூட்டம் நடத்தப்பட்டது.

கர்நாடக மேலவையில் பெங்களூர் நகராட்சியை மூன்றாக பிரிப்பது தொடர்பான சட்ட மசோதாவின் மீது பேசிய ஜனதாதள கட்சியைச் சேர்ந்த கிருஷ்ணப்பாவும், பி.ஜே.பி. கட்சியைச் சேர்ந்த ஈசுவரப்பா அவர்களும் தேவை இல்லாமல் தமிழர்கள் குறித்து சில கருத்துக்களை கூறினார். அதற்கு மேலவையில் வேறு யாரும் எதிர்ப்பு தெரிவிக்காத நிலையில் நாம் நமது சங்கம் சார்பில் உடனடியாக கண்டன அறிக்கை வெளியிட்டதோடு உரியவர்களின் கவனத்திற்கும் கொண்டு சென்று இனி இதுபோன்ற அரசியல் சட்டத்திற்கு எதிரான பேச்சுகள் பேச அனுமதிக்கக் கூடாது. என்று கூறிஉள்ளோம். வரும் காலத்தில் தமிழர்கள் ஒற்றுமையாக இருந்து சட்டமன்றத்திலும், மேலவையிலும் இடம் பிடிப்பது ஒன்றே இதுபோன்ற செயல்களை தடுக்கும். நாம் வெளியிட்ட அறிக்கை கீழ்க்கண்டவாறு இருந்தது.

## கர்நாடக மேல்சபையில் தமிழர்களுக்கு எதிரான பேச்சு வன்மையாக பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் கண்டிகிறது

கர்நாடக மேலவையில் பெங்களூர் மாநகராட்சியை மூன்றாக பிரிப்பது தொடர்பான சட்ட மசோதாவின் மீது பேசிய ஜனதாதள் கட்சியைச் சேர்ந்த இ. கிருஷ்ணப்பாவும், பி.ஜே.பி. கட்சியைச் சேர்ந்த ஈசுவரப்பா அவர்களும் தமிழர்களுக்கு எதிரான, அரசியல் சட்டத்திற்கு முரனான வகையில் பேசி இருக்கிறார்கள். இதனை பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது. அரசியல் சட்டத்திற்கு முரணான அவர்களின் பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று மேலவை தலைவருக்கும், இதுபோன்ற வன்முறையைத் தூண்டும் வகையில் பேசியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் கட்சி

தலைமைக்கும் கடிதம் எழுத இருக்கிறோம். கர்நாடக ஆளுனர், முதலமைச்சர் ஆகியோருக்கும் இந்த அரசியல் சட்டத்திற்கு எதிராக பேசிய இவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

இந்திய நாட்டின் உள்ள இந்தியர்கள் அனைவரும் இந்தியாவில் எங்கு வேண்டும் என்றாலும் அனைத்து சக உரிமைகளோடும் வாழ அரசியல் சட்டம் வழிவகை செய்துள்ளது. 1956ஆம் ஆண்டு மொழிவழி மாநிலங்கள் உருவாக்கப்படுவதற்கு முன்பிருந்தே தமிழர்கள் மைசூர் மாநிலம் என்று அழைக்கப்பட்ட பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள். இந்த மாநிலத்தின் வளர்ச்சிக்காக தமிழர்கள் பெரும்பங்கு ஆற்றி உள்ளார்கள். கன்னடர்கள் இதனை மறந்து விடக்கூடாது. இப்போது தேவையில்லாமல் தமிழர்களை எதிர்க்கும் சில கன்னட தலைவர்களுக்கு இந்த மாநிலம் வளர்ச்சிக்கு தமிழர்கள் ஆற்றி உள்ள பங்கு பற்றி வரலாறு தெரிந்திருக்காது. கர்நாடக உயர்நீதி மன்றத்தை கட்டியவர் ஆற்காடு நாராயணசாமி முதலியார் என்ற தமிழர். கர்நாடக தலைமைச்செயலகமான விதானசவுதாவை கட்டுவதற்கு அப்போதைய அரசின் தலைமைப் பொறியாளர் திரு. மாணிக்கம் முதலியார் என்ற தமிழரும், ஆயிரக்கணக்கான தமிழ் கூலித் தொழிலாளிகளும்தான் காரணம் என்று அப்போதைய முதல்வர் கெங்கால் அனுமந்தையா நன்றியுடன் பலமுறை கூறி உள்ளார். மாநிலத்தின் மிக நீண்ட ரயில் பாதையை அமைத்து கொடுத்தவர் அண்ணாசாமி முதலியார் என்ற தமிழர். ஏன் அண்மைக் காலத்தில் இங்கு உள்ள கிரிக்கெட் ஸ்டேடியத்திற்கான பலநூறு கோடி பெருமான நிலத்தை நன்கொடையாக வழங்கியவர். சின்னசாமி என்ற தமிழர். கன்னட இலக்கியத்திற்கு பெரும் பங்களிப்பைச் செய்தவர்கள் மாஸ்தி வெங்கடேச ஐயங்கார் போன்ற மிகப் பலர்.

இந்த வரலாறை எல்லாம் தெரியாமல் சிலர் தமிழர்களுக்கு எதிராக பேசி இருக்கிறார்கள். காவிரிக் கலவரத்தின்போது வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் அப்போதைய ஆட்சியாளர்களை கடுமையாக கண்டித்ததை அந்த கன்னடர்கள் மறந்து பேசுகிறார்கள். தமிழர்கள் இதனை எல்லாம் நமக்கு விடப்பட்ட சவாலாக எதிர்கொண்டு ஒன்றுபடவேண்டும். தமிழர்களுக்கு எதிராக பேசபவர்களை அந்தகட்சி தலைமை கண்டிக்காவிட்டால் அந்த கட்சிகளையே நாம் புறக்கணிக்க வேண்டும். இது குறித்து இங்குள்ள தமிழ்/தமிழர் அமைப்புகள் அனைவரும் கலந்து பேசி தேவையான உரிய நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம்.

இது தொடர்பாக அனைத்து தமிழ் அமைப்புகளின் கூட்டம் கூட்டப்படும். அதில் முடிவுகள் எடுக்கப்படும் என பெங்களூர்த் தமிழ்ச் சங்கத் தலைவர் கோ. தாமோதரன் செயலாளர் வா. ஸ்ரீதரன் அறிக்கையில் கூறியுள்ளனர்.

- தலைவர் கோ. தாமோதரன்